சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.



श्रीकुम्भकोणक्षेत्रस्थ श्रीकाञ्चीकामकोटिपीठाधिप-जगद्गुरु-श्रीशङ्कराचार्याः

ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

எதிர்காலத்தில் ஒருவருக்கு சிரேயஸ்ஸைக்கோரிய பெரியோர் ஒவ்வொரு காரியத்திலும் ஜாக்ரதையாயிருக்கவேண்டுமென்று உத்தேசிப்பது வழக்கம். அதனால், ஏமாரக்கூடாதென்றும் அனாவச்யமாக உறங்கக்கூடாதென்றும் கருத்து வெளிப்படுகின்றது. உறங்குவது சரீரத்திற்கு ஹிதமாயினும் அதற்கென்று குறிப்பிட்ட காலத்தில் அதை ஸேவித்தாற்றான் ஹிதமாகும். அகாலத்திலே ஸேவித்தாலும், அதிகமாகவோ அற்பமாகவோ ஸேவித்தாலும், ஸேவிக்காமலே விட்டாலும் ஸுகத்திற்கும் ஆயுளுக்கும் கெடுதலாகும். அதனால் அவசியமானவரை ஸுகாதிகளுக்கு கெடுதி ஏற்படாமலிருக்கும்படி குறிப்பிட்ட காலத்தில் நித்திரை செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும் என்று வைத்யசாஸ்திரம் விதிக்கின்றது. இந்த விஷயத்தையே தர்மசாஸ்திரமும் அதிருஷ்டப்பயனையும் உத்தேசித்து விதிக்கின்றது. ஆனது பற்றி விடியற்காலத்தில் ஸூரியோதயத்திற்கு நான்குநாழிகைக்கு முன்னமேயே நித்திரையைவிட்டு எழுந்திருக்கவேண்டும். ஒவ்வொரு தினங்களிலும் கர்மாதிகாரம் பெற்றவர் செய்யவேண்டிய கர்மங்களுள் விடியற்காலத்தில் விழித்துக்கொள்வது முக்யமானதோர் கர்மமாகும். இதுவிஷயத்தில் எல்லா சாஸ்திரங்களும் ஒற்றுமையுடையதாயிருக்கின்றது. ஆகவே மேன்மேலும் சிரேயஸ்ஸை விரும்பியவர் விடியற்காலம் விழித்துக்கொள்வதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

அங்ஙனமாயின் அவ்விதம் செய்யாதவர்களுக்கு ஸுகக்கேடும், ஆயுள் குறைவும் உண்டாவதாகக் காணப்படவில்லையே என்று சங்கை செய்யக்கூடாது. ஸுகமென்றால் இன்னது என்பதையும் ஆயுளின் கணக்கு ஆயுர்வேதத்திலும், சோதிடநூல்களிலும் இவ்விதமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நன்றாய் ஆராய்ச்சி செய்தவர்களுக்கு அவை நன்றாகக் காணப்படும். சரீரத்தை நீடித்தகாலமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்ற ஆவலிருப்பதற்குத் தக்கவாறு அதற்குரிய நன்னடத்தை எவ்வளவுக்கெவ்வளவு மேலிடுகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு தீர்க்ககாலம் ஜீவித்துக்கொண்டிருக்கலாம். அப்படியே நம் முன்னோர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஜீவித்திருந்ததாகபிரமாணவசனங்களினின்றுதெரிந்துகொள்ளுகின்றோம். தர்மசாஸ்திரங்களிலும் 'ரிஷிகளெல்லோரும் ஸந்தியாதி தர்மங்களை நீண்டகாலமாதரித்துவந்தபடியால் தீர்க்காயுஸ்ஸையடைந்தார்கள்' என்று கூறப்படுகின்றது. பிராணிகளெல்லோருக்கும் நீடூழிகாலம் ஜீவித்திருக்கவேண்டுமென்ற ஆசையிருப்பதால் அதற்குத் தக்கபடி காரியங்களைச்செய்ய விடியற்காலமே விழித்துக்கொள்ளவேண்டும்.

விழித்துக்கொண்டு படுக்கைவிட்டெழுந்து சரீரசுத்தி செய்துகொண்டு குருநாதனுபதேசித்தபடி பரமேச்வரனை உட்கார்ந்துகொண்டு தியானம் செய்யவேண்டும். சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

விபவ-௵ தை-௴ ௫௳


## ஆர்யதர்ம விஜயம்.

ஆர்யதர்மமென்னுமோர் வாரப்பத்திரிகை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமதாசார்யபாதாளுடைய பரிபூர்ணானுக்ரஹவிசேஷத்தால் வர்ணாச்ரமதர்மங்களை அதிகாரத்திற்கேற்றவாறாக தர்மசாஸ்திரங்களில் விதித்திருக்கின்றபடி போதித்துவருகின்ற விஷயம் எல்லோருமறிந்ததே. பதிமூன்றுவருஷங்களாக அதை வர்ணாச்ரமதர்மாபிமானிகள் ஆதரித்துவந்திருக்கிறார்கள். நாளது விபவ-௵ தை-௴ 5௳ அதற்கு பதிமூன்று ஆண்டு நிறைந்து பதினான்காவது ஆண்டு ஆரம்பம் ஆகின்றது. கர்மானுஷ்டானத்திற்கென்றே அதற்குரிய ஸாதனங்களோடு அமைக்கப்பட்ட நமது பாரதபூமியில் தற்காலம் தர்மபோதனம் செய்யவேண்டியது அவசியமாயும் உசிதமாயுமுள்ளதென்பதை நமது ஆர்யதர்மாபிமானிகளுள் அறியாதார் யாருமில்லை. தர்மபோதனம் செய்வதும், ஸந்தேஹப்பட்டவிடத்தில் தீர்மானித்து வியவஸ்தை செய்வதும் தர்மசாஸ்திர ஆராய்ச்சி பாம்பரோபதேசப்படி செய்பவர்களும் தர்மகாமனையுள்ளவர்களுமாகிய பெரியோர்கள் செய்யவேண்டிய காரியமாகும். தற்காலத்திலோ அந்த தர்மசாஸ்திர ஆராய்ச்சியைக் கிஞ்சிற்றேனும் செய்யாதவர்களும் தர்மத்தையழித்துவிடவேண்டுமென்ற ஆவலுள்ளவர்களும் அதையுபதேசிக்க முன்வருகின்றார்கள். அதனால் தர்மாபிமானிகளுக்கு தர்மதத்துவம் புலப்படுவதில்லை. அம்மட்டோடில்லாமல் விபரீததர்மங்களும் புத்தியிலுதித்துவிடுகின்றன. அதை மாற்றுவதற்கு எமது ஆர்யதர்மம்போன்ற ஒரு தர்மபத்திரிகை பிரசுரிக்கப்பட்டுவாவிடில் தர்மாபிமானிகள் சிரேயஸ்ஸாதனமின்னதென்றும் தர்மாபாஸமிவையென்றும் தெரிந்துகொள்ளமுடியாமல் போய்விடும். இதை நன்றாய்த் தெரிந்துகொள்ளாமல் தர்மத்தில் அபிமானமிருப்பதால்மாத்திரம்

பயனேற்படமாட்டாது. தர்மத்தின் பயனாகிய ஸுகத்தைப் பெறவேண்டுமானால் உண்மையாய் தர்மதத்துவத்தைத் தெரிந்து கொண்டு அனுஷ்டித்தால்தான் அடையலாம். அதற்காக நமது ஆர்யதர்மபத்திரிகை தர்மதத்வத்தைப் போதிக்கவேண்டிய தாத்பர்யத்தோடு இந்த பதினான்காவது வருஷத்திலும் விஜயமாய் வருகிறது. அதை தர்மாபிமானிகளனைவரும் தங்கள் சிநேகிதர்களையும் சேர்த்துக்கொண்டு ஆதரித்து தர்மதத்வத்தையுணர்ந்து அதை உசிதகாலத்தில் அனுஷ்டித்து அதன் பயனாகிய ஸுகத்தையடைந்து மேன்மேலும் சிரேயஸ்ஸையடைவார்களாக.

சுபம்!

---

உ

## "தர்ம தத்துவம்."

சுருதிஸ்மிருதிகளையாதாரமாகக்கொண்டு இஹபரசிரேயஸ்ஸாதனமாக மஹான்களாலுபதேசிக்கப்படுவதே தர்மமாகும். அவர்களும் ஸ்வயமாக தர்மஸ்வரூபத்தையுபதேசிக்கவோ, மாற்றவோ, அதிகாரமில்லாதவர்களென்றால் ஏனையோர்கள் தற்காலத்தில் தர்மஸ்வரூபங்களை மாற்றுவதற்காக பெருமுயற்சி செய்து வருவது தர்மமாவென்பதை ஆஸ்திகர்களறிந்துகொள்வார்கள்; இதையொருவர் கூறுகின்றார்.

"स्मर्तारो वयमागमस्य नपुनः कर्तुं व्यवस्थां क्षमाः
क्रांते वर्त्मनि तैर्नभावगहने बुद्धिः प्रवेक्ष्यत्यलम् ।
पारावारदृशः करामलकवत्पश्यन्ति भावान्सुखं
येतेषां रसनाग्रयातुगदितं यद्युक्तमत्रस्फुटम् ॥ "

'பரமேச்வரனது ஆக்ஞாரூபமான சுருதிஸ்மிருதிகளை நாம் ஸ்மரிக்கின்றவர்களேயன்றி தர்மவ்யவஸ்தையைச்செய்ய சக்தியுடையவர்களல்ல. ஏனெனில் ஆழ்ந்த கருத்தையடக்கிக்கொண்ட பெரியோர்கள் நடந்ததான வைதிகதர்மமார்க்கத்தில் நமது புத்தி பிரவேசிக்காது. ஆகவே முன்னும் பின்னும் கண்டறிந்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தத்வங்களை எந்த மஹான்கள் அறிந்து

கொண்டிருக்கிறார்களோ அவர்களது நாவுதான் உசிதமான உண்மையைக் கூறக்கிளம்பவேண்டும்" என்று கூறியிருப்பதை நன்குணர்ந்துபார்த்தால் வைதிகமான தர்மவ்யவஸ்தையைச் செய்ய நம்போலியவர்களுக்கு அதிகாரம் கொஞ்சமேனுமில்லை யென்று நன்கு விளங்கும், ஊனக்கண்படைத்தவர்களுக்குபொதுவாய் மனுஷ்யசரீரத்தைப்பார்த்தால் அதில் ஜாதிவேற்றுமையிருப்பதாகத் தோன்றாது. ஞானக்கண் படைத்த மஹான்களுக்கோ வென்றால் நன்றாய் புலப்படும். உதாரணமாக ஒரேவிதமான இலை, கிளை முதலியவைகளுள்ள செடிகொடிகளைப்பார்த்த சிறுவர்களுக்கு அவைகளின் குணபேதங்களைக் கண்டறிந்த வைத்தியர்களுக்கு அதன் சக்தி புலப்படுவதுபோல் புலப்படாது. இவர்கள் புத்திக்கு ஒரேமாதிரி கொடிசெடியாகவேதான் தோன்றும். அவைகளினுள்ளே அடங்கிக்கிடக்கும் அவைகளின் சக்தி எங்ஙனம் புலப்படும். அதுபோல் மனுஷ்யசரீரங்களைப்பார்த்து வெளிப்படையான அங்காவயவங்களை ஒரேமாதிரியாக இருப்பதைக்கண்டு எல்லா மனுஷ்யசரீரமும் ஒரேஜாதியுடையதே, அங்ஙனமிருக்க இதில் ஜாதிபேதம் எது? என்று சிறுவர்கள் நினைப்பார்கள். அதனுள்ளே பூர்வவாஸனைக்குத் தக்கபடி அமைந்துள்ள அவாந்தர ஜாதிபேதத்தை இவர்கள் காணுவார்களா? இவர்கள் கண்டறியாததை இல்லையென்று கூறிவிடமுடியுமா? ஸூக்ஷ்மதரிசியான ஒருவருடைய புத்திக்கு விஷயமாயிருப்பதால் அது உள்ளதென்றே புத்திமான்கள் நிச்சயித்துக்கொள்ள வேண்டும், அங்ஙனமே சரகஸம்ஹிதையில் பூர்வஜன்மவாஸனைக்குத் தக்கவாறு ஸாத்விகம், ராஜஸம், தாமஸமென்று மனதை மூன்றுவிதமாகப்பிரித்து,

" शरीरमपि सत्वमनुविधीयते, सत्वञ्च शरीरम् "

என்றதனால் மனதின் பேதத்துக்குத் தக்கவாறு சரீரத்தினமைப்பும் சரீரத்தில் சேரும் பதார்த்தங்களின் குணத்திற்கேற்றவாறு மனதினமைப்பும் விரிவாகக்கூறப்படுகின்றது. அதில் ஸாத்விக சக்தியுள்ள மனோபேதத்துக்குத் தக்கவாறு பிராம்மன், ஆர்ஷன், ஐந்திரன், யாம்யன், வாருணன், கௌபேரன், காந்தர்வன், என ஏழு வகுப்புப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே ராஜஸ விருத்தியுள்ள மனோபேதத்துக்குத்தக்கவாறு ஆஸுரன், ராக்ஷ

ஸன், பைசாசன், ஸார்ப்பன், பிரேதன், சாகுனன், என ஆறு வகுப்பு பிரிக்கப்பட்டிருக்கின்றது. தமோகுணமுள்ள மனோ பேதத்துக்குத்தக்கவாறு பாசவன், மாத்ஸ்யன், வானஸ்பத்யன் என மூன்றுவகுப்பு பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு பிரிவுகளும் ஸ்தூலதிருஷ்டியுள்ளவர்களான மனிதர்களுக்குப்பிரத்யக்ஷமாய் புலப்படுமென்று கூறமுடியாது. ஐம்பூதங்களாலமைக்கப்பட்ட மனுஷ்யசரீரத்தின் வெளியில் காணப்படும் காந்தியைக் கண்டே ஜாதிபேதத்தை மஹான்கள் பிரத்தியக்ஷமாய் அறிவார்கள். இதன் ஸூக்ஷ்மம் கிரஹங்களின் தசாபலன்களை நிரூபிக்கும் சோதிட நூல்களில் பிரஸித்தமாய் விளங்கும். அதன் விரிவு வேறிடம் காண்க. ஆகவே மனுஷ்யசரீரம் ஓரேவிதமான வெளிப்பட்ட அங்காவயவங்களுடையதுபற்றி ஒரே ஜாதியாயிருக்க வேண்டுமென்று ஜாதிபேதம் கிடையாதென்றும் அதனால் தர்மபேதமில்லையென்றும் கண்டவாறாகத்தானே ஊஹித்துக்கொண்டு கண்டவிடங்களில் கூறுவது பெரியோர்களுக்கழக்கன்று. ஆகையால் தர்மப்பிரமாணங்களில் யுக்தியுடன் நிரூபிக்கப்படும் ஜாதிபேதத்தையும் அதற்குத் தக்கவாறு தர்மபேதத்தையும் உள்ளபடி பெரியோர்கள் வாயிலாகத் தெரிந்துகொண்டு தர்மங்களையனுஷ்டித்து யாவரும் ஸுகித்திருப்பார்களாக. சுபம்.

பத்திராதிபர்

---

# ஓர் ஸந்தேஹம்.

இவ்வருஷம் சென்ற அற்பிசியில் ஏற்பட்ட கிரஹணத்தின் மூலமாய் இவ்வூர் மஹாஜனங்களின் மனதில் இதுவரை துளிர்த்து வந்தான திருக்கணிதப் பஞ்சாங்கத்தின் நம்பிக்கையானது சாகோபசாகையாக வளர ஆரம்பித்திருக்கிறது. ஏனென்றால் இவ்வூர் மகாஜனங்கள் யாவரும் சாஸ்திரங்களிலும், அதன்படி ஒழுக்கம் தவறாது அனுஷ்டித்து வருகிற பெரியோர்களிடத்திலும், ரொம்பவும் நம்பிக்கையோடு கூடியவர்கள். ஆனால் இங்குள்ள பெரியோர்கள் மூலமாக இதுவரை ரொம்பவும் ப்ரமாணமாகவும் அனுஷ்டானத்துக்கு உபயோகமாகவும், வைத்துக் கொண்டிருந்த வாக்கிய பஞ்சாங்கங்களில் போடப்பட்டிருந்தபடி

சென்ற அற்பிசியில் கிரஹணம் ஸம்பவிக்காததாலும் இவ்விதமே இதற்கு முன் பலதடவைகளில் கிரஹங்களின் உதயம், அஸ்தமனம் இவைகளும் ஸரியாக இல்லாமலிருந்தாலும், வாக்யபஞ்சாங்கங்களில் நம்பிக்கை குறைவதற்கு ஆரம்பித்திருக்கிறது. முன் சொன்ன விஷயங்களிலெல்லாம் திருக்கணித பஞ்சாங்கம் ஸரியாக ஒத்திருப்பதால் அதன்படியே அனேகர்கள் அனுஷ்டிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சிலர்களுக்கு இந்தமாதிரியான தோஷங்கள் நன்கு புலப்படினும் இதுவரை அனுஷ்டானத்திக்குக் கொண்டு வந்ததை மாற்றுவதற்கு முழு தைர்யமில்லாதவர்களாகவும், திருக்கணித பஞ்சாங்கப்படி அனுஷ்டிக்கக் கூடாதென்பதற்கு ப்ரமாணமாக

“दृक्सिद्धा नेष्यते तिथिः”

என்ற வாக்யத்தைச் சொல்லுகிறவர்களிடம் அதிக நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருப்பதால் த்ரிசங்குவைப் போல இவர்கள் அந்தாளத்திலிருந்து வருகிறார்கள். ஆகையால் இவர்கள் செய்யக்கூடிய சிராத்தம் முதலிய ஒவ்வொரு விசேஷங்களிலும் ஸந்தேகம் உள்ளவர்களாகவே இருக்கும்படி நேருகின்றது. ஆனால் இங்கு ஜ்யோதிஷத்தில் அதிகப் பழக்கமும், படிப்புமுள்ளவர்கள் தங்களுடைய ஸொந்தத்திற்கு திருக்கணிதத்தையே உபயோகித்துக்கொண்டபோதிலும், மற்றவர்களுக்கும் அதன் நன்மையை எடுத்துக்காட்டி அதன்படி அனுஷ்டிக்கச் செய்ய முன் வராததற்கு இன்ன காரணம் என்று நன்கு புலப்படவில்லை.

தவிர வேறு சில வித்வான்கள் தற்காலம் திருக்கணிதம் என்று வழங்கிவரும் பஞ்சாங்கமும், வாக்யங்களைத் தான் மூலமாக வைத்துக்கொண்டு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வாக்யங்கள் ஏற்பட்டு ரொம்பகாலம் ஆய்விட்டபடியால் சாஸ்திரப்படி சிற்சில ஸம்ஸ்காரங்களால் வாக்யங்களைப்பற்றி அதன்படி கணித்து வருவதால் இந்த திருக்கணிதப் பஞ்சாங்கத்திற்கும், மற்ற வாக்யபஞ்சாங்கத்திற்கும் வித்தியாஸம் ஏற்படுகின்றனவென்றும் திருக்ப்ரமாணத்தை மூலமாக வைத்துக்கொண்டு வாக்யங்களை மாற்றுவதால் மட்டுந்தான் இதற்கு ‘திருக்கணிதபஞ்சாங்கம் என்ற பெயரைத்தவிர இதற்கும் மூலம் வாக்யங்களேதானுகையால் இதுவும் வாக்யபஞ்சாங்கந்தான் என்று சொல்லுகிறார்கள்.

ஆகையால் இந்த விஷயங்களுக்கு ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் நல்ல பாண்டித்யமும் பழக்கமுமுள்ள வித்வான்கள் இரண்டு பஞ்சாங்கத்திற்குமுள்ள குணதோஷங்களையும்

" दृक्सिद्धा नेष्यते तिथिः "

என்ற வாக்யம் எந்தயிடத்தில் என்ன அபிப்பிராயத்துடன் சொல்லியிருக்கிறதென்றும் பெரியோர்கள் திருக்கணித பஞ்சாங்கத்தை அனுஷ்டிப்பதற்கும், வாக்யபஞ்சாங்கத்தில் இந்த மாதிரியான தவறுகள் ஏற்படுவதற்கும் உள்ள காரணங்களையும் ப்ரமாணத்துடன் விசதமாகவும் எழுதி இவ்வூர் ஜனங்களின் ஸந்தேஹத்தை நிவர்த்தி செய்து அனுக்ரஹிக்கும்படி பத்ராதிபர் அவர்களையும் இந்த சாஸ்திரத்துக்காக விச்வவித்யாலத்தில் ஏற்படுத்தியிருக்கும்வித்வான்களையும் இந்தசாஸ்திரத்தில்ப்பாண்டித்தியமுள்ள பண்டிதர்களையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ச. கைலாஸநாதசாஸ்திரி,

---

குறிப்பு. இதற்கு பதில் அடுத்த ஸஞ்சிகையில் வரும். ப—ர்.

# வைதிகமதம்.

ஆரியர்களே! வேதம் முதலிய பிரமாணங்களால் வெளியிடப்பட்டிருக்கும் நமது மதமே பிறநாடுகளில் ஒரு புருஷனுடைய புத்திவிசேஷத்தால் கல்பிக்கப்பட்டிருக்கும் மதங்களைக்காட்டிலும் மேன்மையானது என்பதிலும் புராதனமென்பதிலும் ஸம்சயமே ஏற்படாதாகையால் அவ்விஷயத்தை அனேகந்தடவை அனேகவிதமாய் எடுத்துரைக்கவேண்டுவதும் தெரிந்துகொள்ளவேண்டியதும் அவசியமேயாகும். இவ்வித மதவிஷயங்களை வெளியிடுவதற்காகவே பல வருஷங்களாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்களின் பூர்ணாநுக்ரஹத்தை முன்னிட்டு இவ்வார்யதர்மபத்திரிகை பிரசுரிக்கப்பட்டுவருகின்றது. தக்ஷிண தேசத்தில் லௌகிகஸமாசாரங்களை வெளியிடுவதற்கும் தெரிந்துகொள்வதற்கும் பத்திரிகைகள் பலவிருந்தாலும்

அனேகர்கள் மதவிஷயத்தில் தலையிடுவதே இல்லை. நமக்கு மதமே முக்யமானது, அதைத்தான் நாம் பலப்படுத்தவேண்டும். அதை எவ்விதமாய் செய்வது என்பதைக்குறித்து எனக்கிருக்கும் அபிப்பிராயத்தை பிரமாணமூலமாகத் தங்களிடம் கொஞ்சம் தெரிவிக்கலாம் என்றுத்தேசம். பரதகண்டத்தில் பல வருஷங்களாக ஜனங்களுக்குள் மதவிஷயத்தில் பலத்த துவேஷம் அதிகரித்துவந்ததால் தேசமும் கேவலஸ்திதியையடைந்துவிட்டது. முற்காலத்தில் நமக்கும் நம் பரதகண்டத்திற்கும் இருந்த பெருமை எழுதி முடியாது. பிறநாடுகளில் மதமே தெரியாமலிருந்த ஸமயத்திலும் இங்கு ஆத்மதத்வவிசாரமும் தர்மதத்வங்களும் சில்பசாஸ்திர ரஹஸ்யங்களும் ஆசாரநீதிமுறைகளும் பரவியிருந்தனவென்பது மதப்பிரமாணநூல்களை நன்கு கற்றுணர்ந்தவர்களுக்கு நன்கு புலப்படும். இத்தேசத்திலிருந்தன்றோ தர்மரஹஸ்யங்களனைத்தும் கடலினின்றும் எழும் அலைகள்போலவும் கால்வாய்கள்போலவும் அன்னியதேசங்களுக்குப் பரவிற்று. அனேக வருஷங்களாக அன்னிய ஆசாரங்களால் எதிர்க்கப்பட்டு பற்பல விபரீதஆசாரங்கள் இடை இடையிற்கிளம்பியும் இவைகளால் சிறிதேனும் சலனமின்றிய பர்வதம்போல் நாசமற்ற ஜீவத்வம் வாய்ந்த நம் மதத்தின் பெருமையை எடுத்துக்கூறவும் முடியுமோ? தேசமென்பது ஜனஸமூஹமே. ஒவ்வொருவனுக்கும் மதமே பிராணாதாரமான ரத்தமாகும். அது தெளிவாயும், சுத்தமாயும், வீர்யமுள்ளதாயுமிருக்கும் பக்ஷத்தில் ராஜாங்கவிஷயங்களிலும் இன்னும் பல முக்யவிஷயங்களிலும் நமக்கிருக்கும் குறைகளனைத்தும் சீர்திருத்தமடைந்துவிடுமென்பதில் ஐயமில்லை. வைத்யசாஸ்திரத்தில் ரத்தத்தில் பலமிருந்தால் வியாதிகளுக்குக் காரணமான சில க்ருமிகள் நமது தேகத்தில் ஜீவித்திருக்கமுடியாதென்றும் ரத்தசுத்தி குறையுங்காலத்தில் அவைகள் நமது தேகத்தில் தங்கி வியாதியை விளைவிக்கின்றனவென்றும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்விதம் தேசமாகிய ஜனஸமூக தேகத்தின் மதமாகிய ரத்தபலம் குன்றியகாலத்தில் தேசஹிதமாகிய விஷயங்களெல்லாவற்றிலும் வியாதி உத்பத்தியாய் விடுகின்றது.

"सारमेतच्चिकित्साया निदानपरिवर्जनम्"

என்ற வைத்யசாஸ்திரவசனப்படிக்கு இந்த வியாதியின் காரணத்தையுள்ளபடியுணர்ந்து அதைக்களைந்து இரத்தசுத்தியையடையமுயலுவதுதான் உத்தமமாகும். தற்போது நமக்கு நேர்ந்திருக்கும் குறைவுகளுக்குக் காரணத்தையறிந்து அதை நிவர்த்திசெய்வதற்கு பிரயத்னமெடுத்துக்கொண்டால்தான் நமக்கும் நமது பரதகண்டத்துக்கும் க்ஷேமமேற்படுமேயன்றி அவரவர்களுக்குத் தோன்றினவாறு வர்ணாச்ரமதர்மவ்யவஸ்தையை மீறிநடப்பதாலும் நடக்கும்படிக்கு ஜனங்களுக்கு உபதேசிப்பதாலும் ஒருக்காலும் க்ஷேமமேற்படமாட்டாது என்பது நிச்சயம்.

"धर्मे सर्वं प्रतिष्ठितम्"

என்ற வாக்கியத்தின் அர்த்தத்தை நன்கு பராமர்சம் பண்ணினால் ஸநாதநவைதிகமதத்தைப் பின்பற்றினால் தான் நமக்கபிவிருத்தி ஏற்படுமென்று நிரங்குசமாய் கூறலாம். நமது வைதிக மதத்தை நாம் பரித்தியாகம் பண்ணுவதற்கு எவ்விதப் பிரயத்தினம் எடுத்துக்கொண்டாலும், அது முடிவில் வீணாகவே முடியும். ஏனெனின் நமக்கு மதமே ஜீவாதாரம். அதை நாம் தள்ளிவிட்டு ஜீவித்திருக்கவே முடியாது. பூர்வகாலத்தில் நம் முன்னோர்கள் உயிரைத் துறந்தாவது, மதத்தைக் காப்பாற்றுவதில் பூர்ணமான ஊக்கம், உள்ளவர்களாகவிருந்தார்கள். அவர்களவ்வளவு ஊக்கமும், அபிமானமும் வைக்காமலிருக்கும்பக்ஷத்தில் மதமென்னும் வார்த்தை கூட என்போன்றவர்கள் பேசுவதற்கு முடியாது. மிலேச்சர்களால் இடிக்கப்பட்ட பல தேவாலயங்களெல்லாம் மறுபடியும் அதேமாதிரியில் கட்டப்பட்டுப்பிரகாசிக்க வேண்டுமானால் நமது முன்னோர்கள் எவ்விதம் மதத்திற்குப்பாடுபட்டு வந்தார்களென்பது தெரியாதா? நாமும் அவர்களின் வழியையே பின்பற்றிச் செல்வோமானால், அக்காலத்தில் நமக்கிருந்த பெருமையை மறுபடியுமடையலாம் என்பதில் ஸந்தேகமில்லை. இவ்விஷயத்தை தர்மபுத்திரர் யக்ஷப்ரச்னத்தில்

"महाजनो येनगतस्सपंथाः"

என்ற வசனத்தால் முன்னோர்கள் நடந்துவந் மார்க்கத்தைத்

பின்பற்றுவதே தர்மம் என்று கூறியிருக்கிறார். பூர்வகாலத்தில் நம் முன்னோர்களின் பெருமைகளைத் தெரிந்துகொள்வதும், நமது மதமுன்னேற்றத்துக்கு முதற்படியாகும். மதத்தில் போல் முன்னோர்களிடத்திலும் இக்காலத்தில் ஜனங்களுக்கு அவமதிப்பு அதிகரித்து விட்டதென்பது நான் சொல்லாமலே தங்களுக்குத் தெரியலாம். பூர்வகால ஸம்பந்தமான வார்த்தைகளெல்லாம் தற்காலத்தியவர்கள் பயனற்றவையென்று கருதுகிறார்கள். அது தவறாகும். ஏனெனின், நம்மால் எதிர்பார்க்கப்படும் க்ஷேமமெல்லாம்பூர்வகாலத்தையனுஸரித்தன்றோ அமையவேண்டும். ஜனங்களுக்கு பண்டையகாலத்திய ஸ்திதிதான் உண்மையான க்ஷேமமெனப்படும். ஆதலால் நம்முன்னோர்கள் நம்மைக்காட்டிலும் ஞானத்திலும், ஒழுக்கத்திலும், தவத்திலும், நிக்ரஹாநுக்ரஹத்திலும், பெரியவர்களே என்ற பாவனை நமக்கேற்படுவது அவஸியமல்லவா ? அவர்கள் செய்த அறிய ஒவ்வொரு காரியங்களும் நம்மனதிற்கெட்டாதவைகளாகவேயிருக்கின்றன. நாம் யந்திரம் முதலிய ஸாதனங்களாலும் கண்டுபிடிக்கமுடியாமல் கஷ்டப்படும் விஷயங்களையெல்லாம் தவப்பெருமையாலும், தர்மானுஷ்டான வீரியத்தாலும், கண்டுபிடித்து தமது ஜீவகாருண்யத்தையும், ஸாமர்த்தியவிசேஷத்தையும் பிரகாசம் செய்திருக்கிறார்கள், அவர்கள் தான் தர்மவிஷயத்திலும் மற்றெல்லாவிஷயத்திலும் மார்க்கதரிசிகளாவார்கள். நாம் நடுவாந்திரத்தில்தான் இவ்வித க்ஷீணகதியையடைந்துவிட்டோம். மீண்டும் க்ஷேமத்தை முன்போல் நாம் பெறவேண்டுமானால் முன்னோர்களிடத்திலும், அவர்களுடைய ரத்தஸம்பந்தம் நம்மிடமிருக்கும் விஷயத்திலும், அவர்களின் அறியசெயல்களிலும் நம்பிக்கை வைப்பதுதான் முதற்காரணமாகும். தவிற நமது வைதிகமதம் முன்போல் பிரகாசிக்கவேண்டுமானால், மிகவும் சிறப்புவாய்ந்த ஸம்ஸ்கிருதபாஷையை நம்மவர் யாவரும் படித்து வித்வான்களாகவேண்டும். நம் முன்னோர்களின் காரியங்களையும், நமது ஆசாரங்களையும் நாம் தெரிந்துகொள்வதற்கு ஸம்ஸ்கிருதபாஷையை அப்யாஸம் பண்ணாமல் முடியாது. ஆகையால் ஸம்ஸ்கிருதத்தைக் கற்றுக்கொள்வதில் நாம் பிரயத்தினம் எடுத்துக்கொள்வது நமது க்ஷேமத்திற்கு இரண்டாவது காரணமாகும். ஜமீன்தார்களும், பிரபுக்களும், ஏழைகளும், அரசாங்காதிகாரிகளும்சட்டசபைமெம்பர்களும்தான் முக்கியமாய்

ஸம்ஸ்கிருதத்தையாதரவுடன் அப்யாஸம் செய்யவேண்டும். நமது பாதகண்டத்து வைதிக லௌகிகக்கல்விமுறையெல்லாம் நமது வசமேற்படுத்திக்கொள்ளவேண்டும் இந்த விஷயம் பிரதானமாய் நாம் ஊக்கத்துடன் கவனிக்கவேண்டும். உங்களுக்கு இவ்விஷயத்தில் உணர்ச்சிபதிகரிக்கவேண்டும். அவ்விஷயத்தை நிறைவேற்றுவதற்கு பிரயத்தினம் சட்டசபை மெம்பர்கள்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்காக ஒவ்வொரு சட்டசபை மெம்பருக்கும் ஸம்ஸ்கிருத ஞானமும் அதன் மகத்வமும்அமைந்திருக்கவேண்டும். நமது கல்விமுறையைக்கையாளாமல்விட்டதாலும். வசப்படுத்திக்கொள்ள முயற்சியெடுத்துக்கொள்ளாதகாரணத்தாலும்தான் நாம் இப்போது அனேகவிதமாகக்கஷ்டப்படுகின்றோம். இவ்வித நிலைமையிலும் நாம் கண்விழித்துக்கொள்ளாமலிருக்கின்றோம். இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் கல்விமுறையில் சில நல்ல அம்சங்களிருந்தாலும் கெடுதியே மேலிட்டிருப்பதால் உள்ள சில நல்ல அம்சங்களும்கூட அந்தக் கெடுதியின்கீழ் அகப்பட்டுக்கொண்டுவிடுகின்றன. தவிர தற்காலத்துக் கல்விமுறை உத்தமஸ்வபாவத்தையுண்டாக்கும் கல்வியன்று. நமக்கு ஜீவாதாரமான ஸநாதன மதத்தில் நம்பிக்கையைப்போக்கி, உள்ளதை அழிப்பதே அப்பாஷையின் முழுவேலையாகும். குழந்தைகள் பள்ளிக்குச் சென்றதும் முதலில் தன் தகப்பன் மூடனென்றும், குலகுருக்கள் யாவரும் வேஷதாரிகளென்றும், மகரிஷிகளனைவரும் மடையர்களென்றும்; வேதம் முதலியவைகளனைத்தும் அபத்தமென்றும் படித்துவிடுகிறான். இவ்விதம் மேனாட்டுப் பாஷையைப் படித்து பதினாறு வயதானதும், சரீர பலமற்று, உயிரற்று, யாவற்றையும் இல்லையென்று மறுக்கும் நாஸ்திகசிரேஷ்டனாய் விடுகிறான். பாஷைகளுக்கும் தனியாக சுபவாஸனையையும், அசுபவாஸனையையும் உண்டுபண்ணும் சக்தியுண்டு. பலவருஷங்களாக இக்கல்வி கற்பிக்கப்பட்டுவந்தும்கூட, ஸ்வயநம்பிக்கை, மகத்துவம் இவைகளமைந்தவன் ஒரு புருஷன்கூட கிடைக்கவில்லை. அப்படி யாராவது இருந்தால் அவர்கள் வேறிடங்களினின்றும், ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்று அவ்விதமானர்களே யன்றி, இப்போது நடக்கும் கல்விமுறையாலன்று, லௌகிகஸமாசாரங்களையும், பிரயோஜனமில்லாத விஷயங்களையும் மூளையிலேற்றிச் சுமத்திக்கொள்வது வித்யாப்யாஸமாகமாட்டாது. நல்ல

சீலத்தையும், நற்குணங்களையும் ஆத்மோன்னதியையும், ஸகல புருஷார்த்தங்களையும் கைகூடச்செய்யும் வித்யையை மூளையில் அமர்த்திக்கொள்ள வேண்டும். இவ்விஷயம் மிகப்பெரிதானதால் இதை எங்கே நிறுத்துவதென்று தெரியவில்லை. ஆதலால் ஸம்ஸ்கிருதத்தை உணர்ந்து அவைகளில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் தத்வங்களை சக்திக்குத்தக்கபடி அனுஷ்டித்து தனது வாழ்க்கையைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதுதான் சிரேஷ்டமாகும். இதுதான் நமக்கு ஹிதமானது. வைதிககர்மங்களனைத்தையும் அனுஷ்டித்தால்தான் நற்கதி கிடைக்குமென்று நமது சாஸ்திரங்களின் கருத்தல்ல. சக்திக்குத் தக்கபடி கொஞ்சமாவது ஸ்நாநம், ஜபம், ஸந்தியாவந்தனம் முதலியவைகளை அனுஷ்டித்தாலும்நமக்கு நற்கதியேற்படும். இது தான் நமது மதத்தினியல்பு, அவ்வளவு கூட அனுஷ்டிக்காவிட்டாலும் வைதிக பிரமாணங்களிலும், தர்ம விஷயங்களிலும், அவநம்பிக்கையடையாமல் சிரத்தையையாவது வைத்தாலும் அநுஷ்டித்த காமனையும் பிரயோஜனம் கிடைத்து விடும். இதில் சந்தேகமே இல்லை. இவ்விஷயத்தை கீதாசாரியர் ஒரு சுலோகத்தால் வெளியிட்டிருக்கிறார்.

"येमेमतमिदं नित्यमनुतिष्ठन्ति मानवाः ।
श्रद्धावन्तोऽनसूयन्तो मुच्यन्ते तेपि किल्बिषैः ॥"

என்று இந்த சுலோகத்தில் அஸூயையையகற்றிநம்பிக்கையோடு மதத்தையனுஷ்டிப்பவர்களுக்குமட்டிலும் பாப விமோசனமுண்டென்பது ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் அபிப்பிராயமாயின் "अपि" சப்தம் பொருத்தமுள்ளதாகாது. ஆனதால் மதத்தையனுஷ்டிப்பவர்களுக்கும், அதில் பூர்ணநம்பிக்கையுள்ளவர்களுக்கும் அதிலஸூயைவைக்காதவர்களுக்கும்பாபவிமோசனம்ஸமானமேயாகும்

"स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात्"

என்றபடி மதாநுஷ்டானம் கொஞ்சமிருந்தாலும் சரி. நம்பிக்கை மட்டிலும் வைத்தாலும் சரி. நமக்கு க்ஷேமமடுத்தேயுண்டாகிவிடும். மதத்தில் நம்பிக்கையில்லாவிட்டால் மனிதப்பசுக்களாகவே நாமாகிவிடுவோம். நம்மைக்காட்டிலும் மதத்தில் மிலேச்சர்கள் ஐரோப்பியர்கள் இவர்களுக்குப்பற்றதிகமுண்டு. அவர்களுக்கு மதத்திலவநம்பிக்கையையுண்டுபண்ணுவதுஒருபோதும்முடி

யாது. நமக்குமவர்களைப்போலூக்கம் மதவிஷயங்களிலேற்படு வது அவசியமல்லவா? இராஜ்யதந்திரவுயர்வும்,லௌகிகவிஷயத்தி லுயர்வும் சாதிக்கவேண்டுமென்பது நம்மவர்கொண்ட கருத்தன்று. ஆனால் தர்மத்தினுயர்வே அவர்கள்கொண்ட கருத்தாகும். ஆத லால் நாம் நமக்குபிரதிலையாயுள்ள மதத்தினுயர்வை ஸாதித்துக் கொள்வதற்கு முயலவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

மதத்துத்தாவங்களையுபிரதிலையாய்நிறுத்திக்கொண்டே க்ஷேமங் களைப் பெறுவதற்கு முயலவேண்டும். ஆகவே இப்பாதகண்டத் தில் எவ்வித சீர்திருத்தம் செய்வதாயிருந்தாலும் முதலில் மதத் தைத்தான் சீர்திருத்தம் செய்துகொள்ளவேண்டும். மதத்தின் சீர்திருத்தமென்றால் மதத்தைப் புதிதாகக்கல்பிப்பதுஎன்று நான் கொண்ட கருத்தல்ல. அதை விசேஷமாகப் பயிலும்படி பிரசா ரம் பண்ணவேண்டுமென்பதுதான். ஆதலால் நாமெல்லோரும் வேதாதி பிரமாணங்களிலும், தர்மாஹஸ்யங்களிலும், முன்னோர் களின் நன்னடவடிக்கைகளிலும்,பூர்ணவிசுவாசத்துடன்சிரத்தை எடுத்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். உதாஸீநமாகவிருப் பதற்கு இதுகாலமல்லவென்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்விஷயத்தை எனக்கு ஸமயம் கிடைக்குமானால் மறுபடியும் விஸ்தாரமாய் தங்களிடம் தெரிவித்துக்கொள்ளுகி றேன். இத்துடன் எனது பிரசங்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

“ उत्तिष्ठत - जाग्रत - प्राप्यवरान्निबोधत ”

எழுந்திருங்கள். உறங்காதீர்கள். விழித்துக் கொள்ளுங்கள், விழித்துக்கொண்டு தம் தம் கருமங்களை விதிப்படிசெய்து, அதன் பலன்களையடையுங்கள். என்ற வேதமாதாவின் எச்சரிக்கையை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். ஆர்யதர்மத்தையுமாதரியுங்கள்.

சுபம் !

கும்பகோணம்,
15—1—29.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்,
ஸநாதந தர்மோபந்யாஸகர்,
ஸ்ரீசங்காசாரியஸ்வாமிகள் ஸ்ரீமடம்.

# ஓர் விக்ஞாபனம்.

மகான்களே !

நமது ஹிந்துமத ஆசார ஒழுக்கங்கள் அவதிப்பட்டு நிற்பதற்கு முக்கியகாரணம் யாதெனில் ஆசாரஒழுக்கங்களைப்புகட்டும் பத்திரிகைகள் மிகக்குறைவாகவும் அதற்கு எதிரிடையானபத்திரிகைகள் அதிகமாகவும் ஏற்பட்டிருப்பதே காரணமாகும் இக்காலத்தில் அம்மாதிரியான சிலபத்திரிகைகளை வாசித்துவிட்டு சாஸ்திரங்களைக் குதர்க்கம் செய்ய பலர் தயாராக இருக்கிறார்கள். இக்குதர்க்கத்தை வெல்ல வேதம், புராணம், இதிகாஸம் இவைகளையே மிகச்செல்வாக்குடன் பிரசாரம்செய்யப் பல பத்திரிகைகள் வேண்டும். அதுவே குதர்க்க மனிதர்களின் வாதத்தை வெல்லக்கூடியதாகும். இவ்விடயமாக " ஹரிஹரபக்த " சமூகத்தின் அபிப்ராயம் யாதெனில், (1) ஸ்ரீமடம் ஆஸ்தான பிரசாரக பண்டிதராக பிர்ம்மஸ்ரீ வி. ஜகதீசுவர சாஸ்திரிகள் அவர்களை நியமித்திருப்பதாக பத்திரிகை மூலமாய் அறியப்படுவதால், அவர்கள் ஒவ்வொரு ஊரிலும் சென்று நம் ஸநாதன தர்ம்மவிருத்தியானது இக்காலத்தில் பத்திரிகைகளை ஆதரித்து நிற்கிறது. ஆகையால் "ஸநாதனதர்மோபதேசப்பத்திரிகைகளையே" நாம் தினமும் வாசித்து வரவேண்டும். அதற்காகவே "ஆரியதர்மம்" என்ற பத்திரிகை நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மஹான்களும் அப்பத்திரிகைக்குச்சந்தாதார்களாகச்சேர்ந்து ஆதரிக்கவேண்டுமென்றும், அதன் சாமான பாகங்களையே எடுத்து உரைக்கவேண்டும். அப்பொழுதே " ஆரியதர்மம்" பத்திரிகைக்குச் சந்தாஆர்டர்களை வாங்கியும் அனுப்பவேண்டும். தர்ம்மத்தை அறியாதவர்களே மிகுதியான இக்காலத்தில் அவர்களின் புத்திக்கு எளிதில் புலப்படக்கூடிய விதமாக அரிய விஷயங்களை லௌகிக உதாஹரணங்களுடன் எடுத்துரைப்பதே அப்பண்டிதரின் பிரசாரவேலையாக இருக்கவேண்டும்.

(2) ஒரு கிராமத்தில் பிரசாரப் பிரசங்கம் செய்தால் அதன் அறிகுறியாக ஜனங்களின் கூட்டத்துக்குத் தகுந்தபடி " ஆரியதர்மம்'' பத்திரிகைக்குச்சந்தா ஆர்டர்களை வாங்கி அனுப்பவேண்டும். அதுவே பிரசாரபலத்தின் குணமாகும்.

(3) தனது செல்வாக்கைத் தன்மட்டிலும் நிருத்தித்தன் காரியத்தைச் சரிவரப்பார்த்து விட்டு தர்ம்மப்பிரசாரத்தை கவனிக்காமல் இருக்கக்கூடாது. ஆசாரியாளின் ஸன்னிதான அநுக்கிரஹசக்தியால் அவர்கள் சிறிதும் தனது ஆத்ம பலத்தை நழுவவிடாது ஒவ்வொருவரையும் தனது அமிருதமொழியால் வசப்படுத்தவேண்டும், இச்சக்தி சாமான்னியர்களுக்கு ஏற்படக்கூடியதல்ல, ஆசாரியாளின் திவ்வியாநுக்கிரகம் இருக்கும் காலம் வரை அதற்கு யாதொரு குறைவும் உண்டாக மாட்டாதென்பது இச்சமூகக்கொள்கை.

(4) இதுவரை அவ்விதம் அப்பண்டிதர் அவர்கள் "ஆரிய தர்மம்" பத்திரிகையின் விஷயமாகத் தகுந்த முயற்சி எடுத்திருப்பதாகத்தெரியவில்லை, எடுத்திருந்தால் இத்தருணத்தில் "ஆரியதர்மம்" மிகச்சந்தாவுடன் விளங்கி நிற்கும்.

(5) பத்திரிகையை ஒருபங்குகூட பெரிதாக செய்யவேண்டியது மிக அத்தியாவசியம். அதற்கு பத்திரிகையின் சந்தாதார்களே முக்கிய காரணம். ஒரு சிறு பத்திரிகையில் ஒருவியாசம் (இன்னும் தொடரும்) என்று எழுதாமலிருந்தால் பத்திரிகைக்கும் அதை வாசிப்பவர்களுக்கும் மனச்சந்தோஷம் அதிகமாக இருக்கும். இக்காரியங்களைப் பெருகச்செய்வது பண்டிதர்களிடம் இருக்கிறது. இச்சமூகமானது பத்திரிகாபிரசாரத்தையே ஸதாசாரவிருத்திக்கு முக்கியமெனக் கருதுகிறது.

இவ்விதம் பத்திரிகையைப் பிரசாரம்செய்யவேண்டுமென்று பண்டிதர்களுக்குத் தெரிவிக்காதவரை இம்மாதிரி ஓர் பத்திரிகை சன்மார்க்கமாக நடந்து வருவது அறியாமலேபோய்விடும். அப்போது சதாசாரமும் சந்தாவும் பெருகமுடியாது. இம்மாதிரி சன்மார்க்கம் பெருக இதுவே வழியென்று "ஹரிஹரபக்த" சமூகம் அபிப்பிராயத்துடன் ஸர்வேசுவரனைப்பிரார்த்தித்துக்கொள்கிறது.

(6) சேர்ந்திருக்கப்பட்ட சந்தாதார்கள் தங்களால்இயன்றமட்டிலும் முயற்சிசெய்து புதுச்சந்தாதார்களைச் சேர்த்து முன் பணம் அநுப்பி உதவிசெய்யவேண்டுமெனக்கேட்டுகொள்கிறது.

ஆனைமுகத்தோன் அருள்புரிவானாக.

K. V. வீரமணி வாத்தியர்,
காரியதரிசி,
ஹரிஹரபக்தசமூகம்

கொட்டாரக்கரை,
9—12—28

ஸ்ரீ:

# உண்மை விளக்கம்.

" அகிலபாரதவர்ஷீயப்ராம்மணமஹாஸபை. "

ப்ரும்மஸ்ரீ M. N. ஸுப்ரமணியசாஸ்திரி அவர்கள் காசியில் நடந்த பிராம்மணமஹாஸம்மேளனத்தைப்பற்றி, நமது "ஆர்யதர்மத்தில்" எழுதிவருவது யாவருமறிந்ததே. ஆனல் கடந்த வாரம் ஆர்யதர்மத்தில் 'மகாமகோபாத்யாய அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் मन्त्रब्राह्मणयोर्वेदनामधेयम् எனும் விதியைப் பின்பற்றியே "பதம், க்ரமம், ஜடை, கனம் இவைகளில் ஸ்வரபேதம் எற்படுவதால் இவைகளுக்கு வேதத்வம் கிடையாதென்று பூர்வபக்ஷம் செய்தார். அதற்கு அங்கு கூடியிருந்த பண்டிதர்கள் கூறியஸமாதானமேற்கப்படாததால் அவ்விஷயம் அப்படியே நிறுத்திவைக்கப்பட்டது'' என்று வரைந்திருப்பது உண்மைக்கு மிகவும் வேறுபட்டதே. எமெனனில், அங்கு கும்பகோணம் "ஸநாதநதர்மப்ரசாரக" ஸபையின் பிரதிநிதியாகச் சென்றிருந்த அக்னிஹோத்ரம் தாததேசிகதாதாசாரியார் அவர்களை விசாரித்ததில் உண்மை கீழ்க்கண்டவாறு என்று அறியலானேன். ஒருநாள் ஸந்தோஜிமகாராஜாவிடம் பண்டிதர்கள் கூடினர். அங்கு அவரது கோரிக்கையின்பேல் மூன்று வேதங்களினின்றும் கனம் சொல்லப்பட்டது. பிறகு அவ்விதமே இணங்கி அக்னிஹோத்ரம் தாததேசிகாசாரியர் அவர்கள் "स्वाध्यायोऽध्येतव्य." எனும் விதியைப் பின்பற்றிப் பின்வருமாறு பூர்வபக்ஷஸித்தாந்தங்கள் செய்தார். "स्वाध्यायोऽध्येतव्यः" என்கிற விதி ஸம்ஹிதாத்யயநத்தை மாத்திரம்விதிக்க முற்பட்டது. பதப், க்ரமம் முதலியவைகளில்ஸம்ஹிதை வேறுபட்டு விடுவதால அவைகளை அத்யயநம் செய்ய வேண்டாம் என்று பூர்வபக்ஷம் செய்துகொண்டு, முன்சொன்ன விதி பரம்பராகதமான ஸ்வாத்யாயாத்யயநத்தை விதிக்கவந்தபோதிலும், பதம், க்ரமம், ஜடை, கனம் வரையில் அதற்குக் கருத்துச்சொல்லவேண்டும். (தொடரும்.)

தா. ராமானுஜதாதாசாரியார்,
அய்யங்கார்தெரு, கும்பகோணம்.

---